# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

*********

**முறையீட்டு மனு எண்.105/2017/பே.2**
**ஆணை நாள்: 13 –12–2018**

**திரு இல. ஸ்ரீராமன்,**
**12வது வார்டு முன்னாள் உறுப்பினர்,**
**சின்னம சமுத்திரம்,**
**பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சி,**
**சேலம் மாவட்டம்.** — **முறையீட்டு மனுதாரர்.**

**திரு ஆ. சீத்தாராமன்,**
**12வது வார்டு முன்னாள் உறுப்பினர்,**
**பெத்தநாயக்கன் பாளையம் பேரூராட்சி,**
**சேலம் மாவட்டம்.** — **எதிர் மனுதாரர்**

**ஆணை**

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சி, சின்னமசமுத்திரம், 12வது வார்டைச் சேர்ந்த திரு.இல.ஸ்ரீராமன், தனது 02.05.2017ம் நாளிட்ட முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் 02.05.2017ல் சமர்ப்பித்துள்ளார். மேற்படி முறையீட்டு மனுவிற்கு முறையீட்டு மனு எண். 105/2017 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீது அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் திரு.இல.ஸ்ரீராமன் தனது முறையீட்டு மனுவில், சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சி 12–வது வார்டு, சின்னமசமுத்திரம் கிராம பகுதிக்கு திரு.ஆனந்தன் மகன், திரு. சீத்தாராமன் என்பவர் 2006 முதல் 2016 வரை இரு முறை கவுன்சிலராக இருந்ததாகவும், இவரது தாய் திருமதி பழனியம்மாள், தந்தை திரு.ல.ஆனந்தன் ஆகியோரது பெயரில் முறையே பட்டா எண். 360 சர்வே எண்.225/15 மற்றும் பட்டா எண். 78 சர்வே எண்.225/13 வழங்கப்பட்டுள்ளதாகவும், இரு மனைகளும் அருகருகில் உள்ளதாகவும்

இதில் ஒரு ஓடுவில்லை வீடு மட்டும் திரு. சீத்தாராமன் கவுன்சிலர் ஆவதற்கு முன்னர் கட்டியதாகவும், கவுன்சிலர் ஆன பின்னர் கிராம நத்தத்தில் வீதி மற்றும் மாட்டுப்பாதையை (சர்வே எண்கள்.225/14 225/1) ஆக்கிரமித்து வீடும், குளியலறை மற்றும் சுற்றுச் சுவர் கட்டிக் கொண்டதாகவும், மேற்படி நபர் பதவியில் இருந்ததால் பேரூராட்சி நிர்வாகமும் அனுமதி வழங்கியுள்ளதாகவும் புகார் தெரிவித்துள்ளார். மேலும் திரு. சீத்தாராமன் குடும்பத்தினர் வீட்டின் அருகே ஒரு நிலம் விலைக்குவாங்கி அந்த நிலத்தின் அருகில் ஆற்றங்கரை (சர்வே எண்.86ல்) ஓரம் மேற்கிலிருந்து அண்ணாநகர் செல்லும் பாதையினையும் தனது நிலத்துடன் சேர்த்து ஆக்கிரமித்துள்ளதாகவும் தெரிவித்து விசாரணை கோரி தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 05.05.2017 நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுலருக்கு ஆணையிடப்பட்டது.

பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 23.05.2017 நாளிட்ட கடிதம் முலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 08.09.2017 நாளிட்ட அழைப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 15.11.2017ல் ஆஜராக தெரிவித்து முறையீட்டு மனுதாரர் மற்றும் பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவத்தில் 15.11.2017ல் ஆஜரான பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.கா.விஜயகுமார், மேற்கண்ட முறையீட்டு மனு தொடர்பான தனது விளக்கத்தில் எதிர் மனுதாரர் கிராம நத்தத்தில் வீட்டு மனை பட்டா வாங்கியுள்ளதாகவும், அதில் முன்பு ஒடு போட்ட வீடு இருந்தததாகவும், இப்போது அதில் கான்கிரீட் வீடும் காம்பவுண்டு சுவரும் கட்டியுள்ளதாகவும், புதியதாக கட்டியுள்ள வீட்டிற்கு பேரூராட்சியின் ஒப்புதல் பெறவில்லை எனவும், பழைய வீட்டிற்கும் ஒப்புதல் பெறப்படவில்லை எனவும் பழைய வீட்டிற்கு விதிக்கப்பட்ட அதே வரியை தொடர்ந்து கட்டிக் கொண்டு வருவதாகவும், புதிய வீட்டிற்கு வரிவிதிப்பு எதுவும் செய்யவில்லை எனவும், இது குறித்து தன்னால் 11.09.2017ல் வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டதாகவும், 23.05.2017ல் ஒரு அறிக்கையினையும் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மார்ச், 2017 முதல் பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிவதாகவும், அனுமதி இல்லாமல் கட்டிய கட்டிடங்கள் குறித்து இதுவரை பேருராட்சியால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும், எதிர் மனுதாரர் பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சியில் 2006ஆம் ஆண்டு முதல் 12–வது வார்டு உறுப்பினராக இருந்ததாகவும், ஆக்கிரமிப்பு குறித்து வட்டாட்சியருக்கு 11.09.2017ல் கடிதம் எழுதியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திடம் இருந்து விசாரணை அழைப்பு வந்தவுடன், இம்மாதம் 09.11.2017ல் எதிர் மனுதாரர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளதாகவும்

பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 27.11.2017 நாளிட்ட அறிவிப்பாணையில், முறையீட்டு மனுதாரர் திரு.இல.ஸ்ரீராமன் அவர்களின் 02.05.2017 நாளிட்ட முறையீட்டு மனு, மற்றும் பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் 15.11.2017 நாளிட்ட வாக்குமூல நகல் ஆகியவற்றினை இணைத்து, சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அனுப்பிவைத்து, மேற்படி கட்டிடம் தொடர்பான சொத்து வரி விவரங்கள் குறித்தும், வரி நிர்ணயம் செய்யப்பட்டது மற்றும் இழப்பீடு தொடர்பாகவும் உரிய ஆய்வு மேற்கொண்டு இந்நேர்விற்கு பொறுப்பான அலுவலர்களின் விவரங்களையும் தெரிவிக்க 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6(4) (a) ன் கீழ் ஆணையிடப்பட்டது.

சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தனது 12.02.2018 நாளிட்ட கடிதத்தில் மேற்படி பொருள் தொடர்பான ஆய்வறிக்கையில் மேற்படி பொருள் தொடர்பாக 08.02.2018 ல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும், சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சி 12–வது வார்டு சின்னமசமுத்திரம் கிராமம் பகுதிக்கு கிராம நத்தத்தில் திருமதி.பழனியம்மாள், என்பவருக்கு பட்டா எண்.360 சர்வே எண்.225/15 மற்றும் திரு.ஆனந்தன் என்பவருக்கு பட்டா எண். 78 சர்வே எண்.225/13 ல் வழங்கப்பட்டுள்ளதாகவும், இரு மனைகளும் அருகருகே அமைந்துள்ளதாகவும், கிராம நத்தம் வீட்டு மனை வீதி சர்வே எண்கள்.225/14, 225/13 ஆகிய வழி பாதைகளை வீடு, பாத்ரூம், காம்பவுண்டு சுவர் ஆகியவை 12வது வார்டு முன்னாள் கவுன்சிலர் திரு சீத்தாராமன் என்பவரால் கட்டப்பட்டுள்ளது தொடர்பாக, பெத்தநாயக்கன் பேரூராட்சி செயல் அலுவலரின் கடித எண்.153/2017/அ.1/நாள்.17.05.2017ல் பெத்தநாயக்கன் வட்டாட்சியருக்கு மேற்படி இடத்தினை சர்வே செய்து கொடுக்க அரசு தலைப்பில் உரிய கட்டணம் செலுத்தப்பட்டும், பெத்தநாயக்கன்பாளையம் வட்டாட்சியரின் அறிக்கை நாளது வரை கிடைக்கப்பெறவில்லை எனவும், பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சியில் 2008–2009–ஆம் ஆண்டு இரண்டாம் அரையாண்டு முதல் சொத்து வரி சீராய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும், சொத்து வரி சீராய்வின்போது புகார் சம்பந்தப்பட்ட நபரான திரு.சீத்தாராமன் அவரது தந்தையார் திரு.ஆனந்தன் என்பவரின் பெயரில் 19 x 30 அளவில் வில்லை வீட்டின் பழைய வரி விதிப்பு எண்.3071, கதவு எண்.3, சின்னமசமுத்திரம் குடித் தெரு அரையாண்டு வரித் தொகை ரூ.35/– என இருந்ததை சீராய்வின்படி அரையாண்டு வரித் தொகை ரூ.48/– எனவும் புதிய வரி விதிப்பு எண். 3848 எனவும் நிர்ணயம் செய்யப்பட்டதாகவும், அதனைத் தொடர்ந்து திரு.சீத்தாராமன் தந்தையார், திரு.ஆனந்தன் என்பவர் பெயரில் 20 x 16 கொண்ட அளவில் தார்சு வீடு இருந்ததையும் மேற்படி நபரின் தாயார், திருமதி.பழனியம்மாள் என்பவரின் பெயரில் 20 x 20 அளவில் கொண்ட தார்சு வீடு இருந்ததையும் சொத்து வரி சீராய்வின்போது புதியதாக வரி விதிப்பு செய்யப்பட்டு முறையே, வரி விதிப்பு எண்கள். 3849, கதவு எண்.3–1 மற்றும், 3850, கதவு எண். 3–2 என வரி விதிப்பு செய்யப்பட்டு அரையாண்டு வரி விதிப்பு முறையே ரூ.155/– மற்றும் ரூ.194/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி சீராய்வின்போது இது போன்று அனைத்து வார்டுகளிலும் 855 கட்டிடங்களுக்கு புதியதாக வரி விதிப்பு செய்யப்பட்டு நடப்பு

ஆண்டு வரை கேட்புப்படி வரித் தொகை வசூலிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். இச்சீராய்வு சமயங்களில் செயல் அலுவலராக திரு.பெ.அருணாசலம் என்பவர் 10.04.2016 முதல் 31.01.2011 வரை பணிபுரிந்து ஓய்வு பெற்று 29.05.2012ல் இயற்கை எய்தினார் எனவும் தனது ஆய்வறிக்கையில் சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 26.02.2018 நாளிட்ட அறிவிப்பாணையின்படி, மேற்படி முறையீடு தொடர்பாக பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர், இம்முறைமன்ற நடுவத்தில் 15.11.2017ல் அளித்த வாக்குமூலத்தின்படி இப்பொருள் தொடர்பாக எதிர் மனுதாரால் தொடரப்பட்டுள்ள வழக்கில் பேரூராட்சியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வாதுரையின் நகலினை சமர்ப்பிக்கத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் 12.03.2018 நாளிட்ட அறிக்கையுடன் எதிர் மனுதாரரால் தொடரப்பட்ட வழக்கில் பேரூராட்சியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வாதுரையின் நகலினை இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 07.05.2018 நாளிட்ட அழைப்பாணையின்படி மேற்படி முறையீடு தொடர்பாக முறையீட்டு மனுதாரரை தனது விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 14.06.2018ல் ஆஜராகத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

14.06.2018ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு.இல.ஸ்ரீராமன் மேற்படி முறையீடு தொடர்பான தனது விளக்கத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"........02.05.2017 நாளிட்ட புகார் மனு தன்னால் அனுப்பப்பட்டது எனவும், திரு.சீதாராமன் 12–வது வார்டு கவுன்சிலராக பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சி பொறுப்பில் இருந்ததாகவும், இத்துடன் தனது எழுத்து மூலமான விளக்கத்தை சமர்ப்பிப்பதாகவும் அதனையே தனது வாக்குமூலமாக எடுத்துக் கொள்ளவும் தெரிவித்துள்ளார். திரு.சீத்தாராமன், முன்னாள் பேரூராட்சியின் கவுன்சிலர், விதிமுறைகளை மீறி அரசு நிலத்தை அபகரித்து வீடு கட்டியுள்ளதாகவும் அவர் பதவியிலிருந்த நேரத்தில் ஆக்கிரமிப்பு இடங்களை ஒதுக்கி பேரூராட்சி மூலம் கழிவுநீர் கால்வாய் கட்டியதாகவும் அதே போல் அவரது வீட்டின் பின்புறம் விவசாய நிலத்துடன் வசிஷ்ட நதி ஓரமாக உள்ள அரசு புறம்போக்கு பாதையை சேர்த்து விவசாயம் செய்து வருவதாகவும், அந்த பாதையை ஆக்கிரமிப்பு செய்து விட்டதால் அந்த பகுதி மக்கள் ஆற்றில் இறங்கி செல்வதாகவும், ஆக்கிரமிப்பை நீக்கி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர ஆணையிடுமாறு கேட்டுக் கொள்வதாக தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனு மீதான பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம், சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஆய்வறிக்கை மற்றும் முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலம் ஆகியன பரிசீலிக்கப்பட்டன. இந்நேர்வில் மேற்படி புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள நிலங்களின் உரிமை மற்றும் அனுபோகம் குறித்து எதிர் மனுதாரரான திரு.சீத்தாராமன், பெத்தநாயக்கன்பாளையம் முன்னாள் வார்டு

உறுப்பினர், ஆத்தூர் உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.O.S.No.226/2017ல் வழக்கு தொடர்ந்துள்ளது அறியப்பட்டது. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b) ன் கீழ் நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரணை செய்திடலாகாது என்பதால், முறையீட்டு மனுதாரரின் மேற்படி நிலங்களின் ஆக்கிரமிப்பு குறித்த முறையீடு இம்முறைமன்ற விசாரணக்கு உகந்ததல்ல எனக் கருதி அவ்வாறே ஆணையிடப்படுவதுடன், நீதிமன்ற வழக்கின் தீர்ப்பு வரப்பெற்றவுடன், தீர்ப்பின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படு கிறது.

2018–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 13 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளருக்காக.

பெறுநர்
1.திரு. இல. ஸ்ரீராமன்,
12வது வார்டு முன்னாள் உறுப்பினர்,
சின்னம சமுத்திரம்,
பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சி,
சேலம் மாவட்டம்.
2.செயல் அலுவலர்,
பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சி,
சேலம் மாவட்டம்.
3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
சேலம் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சேலம்.